# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : **2363 5010, 2363 5011** நிகரி : **2363 8282, 2363 8283**
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - **www.tnsec.tn.nic.in**

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் **08/2020** — நாள் **22.01.2020**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 11.01.2020-ல் நடைபெற்ற சாதாரண மறைமுகத் தேர்தல்களின்போது பல்வேறு காரணங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி தலைவர் மற்றும் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் 30.01.2020-ல் நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. அதன்படி, கீழ்க்கண்ட பதவியிடங்களுக்கு 30.01.2020-ல் மறைமுகத் தேர்தல்கள் நடைபெற உள்ளது.

| | | |
|---|---|---|
| மாவட்ட ஊராட்சித் தலைவர் | - | 1 பதவியிடம் |
| மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் | - | 1 பதவியிடம் |
| ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் | - | 26 பதவியிடங்கள் |
| ஊராட்சி ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் | - | 41 பதவியிடங்கள் |
| கிராம ஊராட்சித் துணைத் தலைவர் | - | 266 பதவியிடங்கள் |
| மொத்தம் | - | 335 பதவியிடங்கள் |

(த.பி.பா)

மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சி துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களுக்கு 30.01.2020 முற்பகல் 10.30 மணிக்கும், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களுக்கு 30.01.2020 பிற்பகல் 3.00 மணிக்கும் தேர்தல் நடைபெறும். இதில், தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாக்களிப்பர் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவிக்கின்றது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

22/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்